


கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள், 2015-16-ம் கல்வி ஆண்டில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில், மாநில அளவில் இரண்டு மற்றும் மூன்றாம் இடம் பிடித்த 17 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் ஊக்கத்தொகைக்கான காசோலைகள் மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இன்று (13.03.2017) வழங்கினார். மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி. சிவகாமி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 184/2017 நாள்: 13.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள், 2015-16-ம் கல்வி ஆண்டில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில், மாநில அளவில் இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களை பெற்ற 17 மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலைகள், பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் இரண்டு பயனாளிகளுக்கு விலையில்லா சலவைப்பெட்டிகள் என மொத்தம்19 நபர்களுக்கு ரூ. 2 இலட்சத்து 89 ஆயிரத்து 300/- க்கான நலத்திட்ட உதவிகளை பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இன்று (13.03.2017) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (13.03.2017) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக, 2015-16-ம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில், மாநில அளவில் இரண்டாம் இடத்தினை பிடித்த 5 மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ. 20 ஆயிரத்திற்கான காசோலைகளையும், மூன்றாம் இடத்தினை பிடித்த 12 மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.15 ஆயிரத்திற்கான காசோலையினையும் என மொத்தம் 17 மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 2 இலட்சத்து 80 ஆயிரத்திற்கான காசோலைகளையும், பாராட்டுச்சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும், கீழமூலச்சல் என்ற இடத்தை சார்ந்த திருமதி. மேரி திரேஸ் என்பவருக்கும், முட்டைக்காடு என்ற இடத்தை சார்ந்த திருமதி. பாய் ஆகியோர்களுக்கு தலா ரூ. 4 ஆயிரத்து 650/- மதிப்பிலான விலையில்லா சலவைப்பெட்டிகள் என மொத்தம் 19 நபர்களுக்கு ரூ. 2 இலசத்து 89 ஆயிரத்து 300/- க்கான நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (13.03.2017) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி. சிவகாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.